# இந்திய குடும்ப வாழ்வு இயக்கச் செய்தி மடல்
# (Save Indian Family Times)

## முதல் இதழ் :: ஜூலை 2008

அன்புநிறை வாசகர்களே!

நம் பாரம்பரிய குடும்பக் கட்டுமான அமைப்பானது பெற்றோர், மகன், மகள், மருமகள், குழந்தைகள் ஆகிய இவர்கள் அனைவரும் அடங்கிய ஒரு அன்புசால் உறவின்முறை அடிப்படையில் அமைந்தது. இத்'தகைய வாழ்வு நெறியை அழித்து ஒழிக்கும் முயற்சியில் பலவகை தீய சக்திகள் செயல்பட்டுக் கொண்டிருப்பது நீங்கள் அனைவரும் அறிந்ததே. சமீப காலங்களில் தோன்றி, நம் சமூகத்தில் மிகப்பெரும் அழிவுத் திறன் கொண்டதாக அமைந்திருக்கும் இவ்வகை எதிர்மறைச் சக்திகளில் ஒன்று இந்திய குற்றவியல் சட்டம் 498-A பிரிவில் கண்டுள்ள வரதட்சிணைக் கொடுமை ஒழிப்புச் சட்டமாகும் (Sec. 498A of IPC).

நம் நாட்டின் சமூக வாழ்வில் வரதட்சிணை என்பது ஒரு புரையோடிப் போன தீமையாக இருந்தது உண்மைதான். இத்தகைய காட்டுமிராண்டி முறையை அறவே நீக்க வேண்டும் என்பதற்காக பல சமூகவியலாளர்கள் முயன்று வருகிறார்கள். பல்வித வெகுஜன ஊடகங்களும் இதனைப் பறைசாற்றி வருகின்றன. பற்பல மதகுருமார்களும் வரதசிணை கேட்பது, கொடுப்பது இரண்டையும் தவறு என்று போதித்து வருகின்றனர். இத்தகைய முயற்சிகளினால் சமூகத்தில் இதுவிஷயமாக ஒரு விழிப்புணர்வு வந்தடைந்துள்ளது என்பதும் நிஜம். உண்மையில் படித்த இளஞர்களிடையே இன்றைய நிலையில் வரதட்சிணை என்பதே இல்லாத ஒன்றாக ஆகிவிட்டதை மக்கள் அறிவர்.

சமீபத்தில் இதுபோன்ற வரதட்சிணைக் கொடுமையை ஒழிக்க ஒரு சட்டமும் இயற்றியுள்ளனர் ஆட்சியாளர்கள். அது தோன்றியதன் அடிப்படை நோக்கம் மேன்மையானதுதான். ஆனால் அந்த சட்டத்தின் அமைப்பு, அதன் செயல்பாடு ஆகியவை அதை ஒருமுழுமையான கொடுங்கோன்மை சட்டமாக மாற்றிவிட்டதுதான் உண்மைநிலை. ஒரு மணமான பெண் ஒரு காகிதத்திலோ, ஈமெயில் மூலமாகவோ தன் கணவன், கணவனின் பெற்றோர், உடன் பிறந்தோர், மற்றும் உறவினர், நண்பர்கள், அண்டை வீட்டார் போன்றோர் தன்னிடம் வரதட்ணை கேட்டு மனத்தளவில் துன்புறுத்தினர் என்று குறிப்பிட்டால் போதுமானது. உடனே அந்த புகாரில் குறிப்பிட்டுள்ள அனைவரும் கைது செய்யப்பட்டு விடுவார்கள். எவ்வித விசாரணையும் கிடையாது. இதுபோல் இந்தச் சட்டத்தை எவ்வித நியாய உணர்வுமின்றி அராஜகமாக இயற்றியிருப்பதால், இது கெடுமதி படைத்த பெண்களின் கையில் சிக்கி ஒரு "சட்டபூர்வ தீவிரவாதமாக" மாறிவிட்டதுதான் நிதர்சனம். உண்மையில் இந்தச் சட்டத்தை **"Legal terrorism"** என்றே ஒரு உச்ச நீதிமன்ற நீதிபதி குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தக் கொடுங்கோன்மை சட்டத்தை கையிலெடுத்துக் கொண்டு பல பெண்கள், தங்கள் பெற்றோர் மற்றும் உறவினர் துணையுடன் கணவனையும் அவர்தம் குடும்பத்தினரையும் கொடுமைப்படுத்தி, பயமுறுத்தி பல இன்னல்களுக்கு ஆளாக்கி பின்னர்

பெருந்தொகையை அவர்களிடமிருந்து கறக்கப் பயன்படுத்தி வருகின்றனர். நன்கு படித்து கைநிறைய சம்பாதிக்கும் பெண்கள்தான் பெரும்பாலும் இத்தகைய சட்ட துஷ்பிரயோகத்திலும், பணம் பிடுங்குவதிலும் ஈடுபட்டு வருகின்றனர். இது வெளிநாடுகளில் பணிபுரியும் ஆண்களையும் விட்டு வைப்பதில்லை. மணமாகி பின் வெளிநாட்டில் வசிக்கும்போது என்றோ ஒருநாள் என்னைக் கொடுமைப் படுத்தினார்கள் என்று இந்தியாவிலிருக்கும் ஒரு காவல் நிலையத்தில் புகார் அளித்தால் போதும், உடனே கணவன் மற்றும் புகாரில் குறிப்பிட்ட நபர்கள் அனைவரும் கம்பி எண்ணத் தொடங்கிவிடுவார்கள்.!

இதுபோன்ற நிகழ்வுகள் சமீப காலத்தில் மிக அதிகமாகிவரும் நிலையில் இந்த 498A எனும் சட்டப் பிரிவு, மணமான பெண்கள் தங்கள் கணவன்மாரிடமிருந்து அச்சுறுத்திப் பணம் பறிக்கும் ஆயுதமாக மாறியிருப்பது கண்கூடாக அனைவருக்கும் தெரியவந்திருக்கிறது. இதனை பல சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், சமூகவியலாளர்கள், அரசுத்துறையிலிருப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் உணரத்தலைப்பட்டுள்ளனர்.

இதுபோல் இந்த 498A சட்டத்தின் தவறான பயன்பாட்டைத்தைத் தடுத்து நிறுத்தி, பாதிக்கப்பட்ட கணவர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு உதவும் விதமாக "இந்திய குடும்பப் பாதுகாப்பு இயக்கம்" (Save Indian Family), "ரக்ஷக் ஃபவுண்டேஷன்" போன்ற அமைப்புகள் தோன்றி தொண்டாற்றி வருகின்றன. அவற்றின் மூலமாக நிகழும் ஆர்ப்பாட்டங்கள், தர்ணாக்கள், கையேடு வழங்குதல், மனுக்களை அளித்தல், பேட்டிகளில் பங்கெடுத்தல் போன்ற செயல்பாடுகள் மூலம் மக்கள் மத்தியில் இந்த வன்கொடுமைச் சட்டத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்தச் செய்திமடல் இத்தகைய முயற்சிகளில் ஒரு பங்குதான். இதன் மூலம் 498A சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் சோகக் கதைகளை வெளிக்கொணர்ந்து இந்த சட்டத்தின் தவறான பயனீடுகளைத் தடுப்பதுதான் எங்கள் நோக்கம்.

இந்த மடலைப் பற்றிய தங்கள் கருத்துக்களையும், இனிவரும் செய்திமடற்களில் இடம் பெறுவதற்கான செய்திகள் பற்றிய உங்கள் பரிந்துரைகளையும் editorindianfamilytimes@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பக் கோருகிறோம்.

## நீதிமன்ற வளாகங்களிலிருந்து பெற்ற செய்திகள்

1. மும்பை உயர்நீதி மன்றத்தில் ஏப்ரல் 8, 2008 அன்று அளிக்கப்பட்ட தீர்ப்பின்படி ஒரு பெண் தன் மணவாழ்வில் கொடுமைப்படுத்தப்பட்டாள் என்று நிரூபிக்கப்படாவிட்டால் அவளுக்கு பராமரிப்புத்துகை (maintenance) ஏதும் கணவன் கொடுக்கவேண்டியதில்லை. இது ஒரு முக்கிய தீர்ப்பு. ஏனெனில் இது பல துர்மதி படைத்த பெண்கள் வேலை எதுவும் செய்யாமல் தன் முன்னாள் கணவன் அளிக்கும் பணத்திலேயே வாழ்வைக் கழிக்கும் முயற்சிகள் தடுக்கப்படும். இந்தத்தீர்ப்பு பற்றிய மேல்விவரங்களை http://www.498a.org/ வலைத் தளத்தில் காணலாம்.

2. உச்சநீதிமன்றம் 8 மே, 2008 அன்று அளித்துள்ள ஒரு தீர்ப்பில் இரு தரப்பினரும் சமரசம் பேசி விட்டனர் என்ற ஒரே காரணத்தினால் மட்டும் 498A சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் நீக்கிவிட இயலாது என்று கூறியிருக்கிறது. ஒவ்வொரு வழக்கின் தன்மையையும் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட நீதிமன்றங்கள் முடிவெடுக்கவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. (வழக்கு விவரம்: http://www.498a.org/). இது ஒரு முக்கிய தீர்ப்பாகும். இதன்மூலம் நீதிமன்றத்திற்கு வெளியே பணம் கொடுத்து தீர்த்துக் கொள்வதற்காகவே கொணரப்படும் பொய் வழக்குகள் குறையும்.

## பொய் வழக்கு போட்ட வெட்கமற்ற பெண்மணிகளின் விவரங்கள்:

பெயர்: **கீதிகா நன்ட்வானி**
மணமானபின் பெயர்: கீதிகா கபூர்
பிறந்த தேதி: 20-09-1978
பிறந்த இடம்: சோனிபெட், ஹரியாணா
படிப்பு: எம்.எஸ்ஸி (ஐ.டி மற்றும் நூல்நிலையவியல்)
தந்தை: அடம் ப்ரகாஷ் நண்ட்வானி
தாய்: மம்தா நண்ட்வானி
உடன்பிறப்பு: ஜெய் கோபால் நண்ட்வானி
வீட்டு முகவரி: 27, நண்ட்வானி நகர், சோனிபெட், ஹரியாணா - 131001

498A வழக்கு பதிவான நாள்: 30-01-2008
------------------------------------------------------------

இந்தப் பகுதி இந்த பொய் 498A வழக்கின் மூலம் ஆண்களையும் அவர்கள்தம் குடும்பத்தினரையும் கொடுமைகளுக்கு உள்ளாக்கிய பெண்களை அடையாளம் காட்டி, இத்தகைய பெண்கள் வேறு அப்பாவி ஆண்களையும் தங்கள் பொறியில் சிக்க வைத்து சீரழிப்பதைத் தடுக்கும் ஒரு முயற்சி. இதன் மூலம் ஆண்கள் தெளிவு பெற்று தங்களைக் காத்துக் கொள்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

உங்கள் மீதும் உங்கள் குடும்பத்தினர் மீதும் பொய்யான 498A வழக்குப் பதிவு செய்த பெண்ணின் விவரங்களை இந்தப் பகுதியில் இட விரும்பினால் எங்களுக்கு மின்னஞ்சல் மூலம் தெரிவியுங்கள். இயன்றால் அந்தப் பெண்ணின் புகைப்படத்தையும் இணையுங்கள். அத்தகைய பெண்கள் வேறு பெயரில் தோன்றி இன்னொரு ஆணின் வாழ்வை நாசமாக்காமல் தடுக்கலாம்!

## 498A வெற்றிச் செய்திகள்

ஷோனீ கபூர் என்னும் இளம் மென்பொருள் பொறியாளர், கீதிகா நண்ட்வானி என்பவரை 2005-ல் மணந்தார். ஜனவரி 2008-ல் ஷோனீயின் மனைவி தன் பிறந்தகம் உள்ள ஊரில் (சோனிபேட், ஹரியாணா) 498A புகார் கொடுத்தார். எப்போதும்போல் ஷோனீயின் பெற்றோர், தங்கை, மாமா, மாமி அனைவரையும் புகாரில் குற்றவாளிகளாக்கியிருந்தது.

நல்ல வேலையாக் ஷோனீ புத்திசாலித்தனமாக நடந்துகொண்டிருந்தார். தன் மனைவி மற்றும் அவருடைய குடும்பத்தினர் தன் மண வாழ்வை சீரழித்து, தன் குழந்தையின் வாழ்வையும் சிதைக்க முயற்சிக்கிறார்கள் என்பதை யூகித்து, தன் குடும்பத்தில் நிகழ்ந்த பல உரையாடல்களை பதிவு செய்திருந்தார். மேலும் எந்த வித வரதட்சிணை கோரிக்கையும் நடக்கவில்லை என்று நிரூபணம் செய்வதற்கு பல தரவுகளையும் சேகரித்து வைத்திருந்தார்.

பின் அவர் மூத்த காவல்துறை அதிகாரிகள சந்தித்து முறையிட்டார். பல அமைச்சர்களையும், அரசுத்துறை அதிகாரிகளையும் தொடர்பு கொண்டு, தன் மனைவி மற்றும் குடுபத்தினரின் குற்ற நடவடிக்கைகளையும் ஆதாரங்களுடன் வெளிப்படுத்தினார். இத்தகைய நடவடிக்கைகள் மூலம் தன் உடன்பிறப்பு மற்றும் உறவினர்களின் பெயர்களை குர்றவாளிகள் பட்டியலிலிருந்து நீக்கச் செய்தார். பெருந்தொகை கொடுத்தால் புகாரை வாபஸ் பெறுவேன் என்னும் ஆசை காட்டுதல்களை நிராகரித்து ஆண்மையுடன் வழக்கை சந்திக்கிறார் நம் ஷோனீ.

நீதி நிலைபெற்று ஷோனீ இந்த அக்னிப் பரீட்சையிலிருந்து வெற்றிகரமாக வெளிவர நாம் எல்லோரும் அவரை வாழ்த்துவோம்!

ஷோனீயை நீங்கள் harassed.by.498a at gmail dot com என்னும் மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

## 498A பொய் வழக்குக்கு இரையானவர்களின் வழக்கு விவரங்கள்

ஜோர்ஹட்டைச் சேர்ந்த திரு.பி.எஸ்.நியோக் என்பவரின் மனைவி அவருடைய இரண்டு வயது குழந்தையையும் தூக்கிக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறிவிட்டாள். பின் அவர்மேல் 498A மற்றும் குடும்ப வன்முறை போன்ற பல சட்டங்களின் அடிப்படையில் வழக்கு போடுவேன் என்று மிரட்டியிருக்கிறாள். திரு.நியோக் இந்திய விடுதலைக்காகப் போராடியவர்களின் குடும்பத்தில் தோன்றியவர். மேலும் அவருடைய குடும்பத்தில் பலர் நாட்டுக்காக துணிவுடன் போராடியவர்கள் என்று விருது பெற்றவர்கள், பலர் ராணுவத்தில் பணியாற்றுபவர்கள். மற்றும் பலர் ஆசிரியர்கள். அவர் இந்த பொய் கேசுகளிலிருந்து தப்புவது எப்படி?

***நம்முடைய அறிவுரை:***

இம்மாதிரி பொய் வழக்குகளை எதிர்கொள்ளும்போது முக்கியமாகக் கைக்கொள்ள வேண்டிய அணுமுறையானது - "அதிரடித் தாக்குதல்தான் சிறந்த தற்காப்பு" என்பதாகும். அந்தப் பெண் கிரிமினல் வழக்கு போடுவதாக பயமுறுத்தினால், இவரும் காவல் துறையிடம் அந்தப் பெண் மற்றும் அவருக்குத் துணைபோகும் ஏனையோர் மேல் ஐ.பி.சி 503 பிரிவின்கீழ் (threat of criminal itimidation) நடவடிக்கை எடுக்கும்படி கோரி புகார் கொடுக்கவேண்டும்.

ஒரு பெண் உங்கள்மேல் இதுபோன்ற கிரிமினல் வழக்கு போடுவேன் என்று அச்சுறுத்தினாலோ, அல்லது உண்மையிலேயே அப்படியொரு வழக்கை பதிவு

செய்தாலோ, அதன்பின் கணவன், மனைவியிடையே எந்த ஒரு இணக்கமோ, உறவோ இருக்க சாத்தியமேயில்லை என்பதை முக்கியமாக மனத்தில் இருத்திக் கொள்ளவேண்டும். அந்தப் பெண் தன் நோக்கத்தை தெளிவாகக் கண்பித்துவிட்டாள் - அதாவது அவள் எவ்வித பொய்யையும் கூறத் தயார்; எவ்விதமான நேர்மையற்ற செயல்பாட்டுக்கும் தயார்; சட்டத்தையும், நீதிமன்றங்களையும் இயன்றவரை தவறாகப் பயன்படுத்தி உங்களை துன்புறுத்தத்தயார் என்பதை ஐயத்துக்கு இடமின்றி நிரூபித்து விட்டாள். நீங்கள் இதற்கு முன் எவ்வளவு தூரம் அன்பைப் பொழுந்திருந்தாலும் அதையெல்லாம் துடைத்தெறிந்துவிட்டு காவல் நிலையத்திலும் கோர்ட்டிலும் படியேறி பொய் மெல் பொய்யாக அடுக்கி ஒருபோதும் நிகழாத அநியாயமான கற்பனைப் புகார்களை சிறிதும் மனம் கூசாமல் தொடுக்கும் பெண்ணிடம் நீங்கள் அதன்பிறகு எத்தகைய நல்லுணர்வுகளை எதிர்பார்க்கமுடியும்? சாதாரணமாக ஆண்கள் இதுபோன்ற சூழ்நிலைகளில் மனமிரங்கி கோழையாக மாறிவிடுகிறார்கள். இந்த கழிவிரக்க பலவீனத்தைப் பயன்படுத்தி பல பெண்கள் தங்கள் கிரிமினல் செயல்பாடுகளை இன்னும் தீவிரமாக்குவதைக் காண்கிறோம்.

இந்த இடத்தில் ஒரு முக்கிய விஷயத்தை நினைவில் இருத்திக் கொள்ளவேண்டும். இரத்தச் சுவை கண்ட கொடுவிலங்குகள்போல்தான் அத்தகைய பெண்களின் அணுகுமுறை இருக்கும். மேன்மேலும் எவ்வாறு கணவனைத் துன்புறுத்தலாம்: 498Aஆயிற்று, அடுத்து குடும்ப வன்முறைச் சட்டத்தில் ஒரு கேசு, மாமனார் கையைப் பிடுத்து இழுத்தார் என்று ஒரு வழக்கு, கணவன் இன்னொரு பெண்ணோடு கள்ளத் தொடர்பு வைத்திருக்கிறார் என்று மற்றொரு புகார் இப்படி பொய்மேல் பொய்யாக அடுக்கிக் கொண்டே போவாள். இது சர்வசாதாரனமான நிகழ்வாகி விட்டது. இதனால் கண்வன்மார்கள் தங்களின் கற்பனை உலகிலிருந்து மீண்டு, உண்மைநிலையை அறிந்து அந்தப் பெண்ணின் தொடர்பே இல்லாத வாழ்விற்கு தங்கள் மனத்தைத் தயார்ப் படுத்திகொள்ள வேண்டும்.

அப்படியொரு அற்புதம் நிகழ்ந்து, உங்கள் மீதும் உங்கள் குடும்பத்தினர்மீது சேற்றை வாரி இறைத்த அந்தப் பெண், தான் செய்த எல்லாத் தவறுகளுக்கும் வருந்தி மன்னிப்பு கேட்டுவிட்டாள், அதனால் அவளுடன் மீண்டும் மணவாழ்வைத் தொடரவேண்டும் என்று நீங்கள் கருதினால் நீங்கள் கைக்கொள்ளவேண்டிய வழிமுறைகள்:

1. நடந்த நிகழ்வுகள் அனைத்தையும் நன்கு மனத்தில் கொணர்ந்து, இது உண்மையான மனமாற்றம்தானா என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.

2. உங்கள் வழக்கறிஞரிடம் ஆலோசனை பெறுங்கள்

3. அவள் போட்ட வழக்குகள் அனைத்தும் வாபஸ் பெறப்பட்டதனவா என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள்

4. வேறு எந்த வித புகாரும் நிலுவையில் உள்ளதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

5.அந்தப் பெண்மணியை அ) எந்தவித வரதட்சினையும் ஒருபோதும் கேட்கப்படவில்லை. ஆ) எந்தவித கொடுமைக்கும் (உடல்ரீதியாகவோ மனரீதியாகவோ) தான் உட்படுத்தப்படவில்லை இ) மனவாழ்க்கை சுமுகமாக

இணக்கமான சூழ்நிலையில்தான் இருந்தது ஈ) தான் கொடுத்த புகார்கள் அனைத்தும் பொய்யானவை. அவற்றுக்காக மன்னிப்புக் கோருகிறேன் - இவ்விதமாக ஒரு ஆணை உறுதி வாக்குமூலம் (affidavit) எழுதி சாட்சிகள் முன்னிலையில் கையொப்பமிட்டு அது ஆவணப்படுத்தப்படவேண்டும். அந்தப் பெண்ணின் பெற்றோர் மற்றும் உடன்பிறந்தோரும் அதே வகையிலான உறுதிமொழி கையொப்பமிட்டு அளிக்கவேண்டும். அந்த ஆவணங்களை நீங்கள் மனைவியின் கைக்கு எட்டாத வகையில் ஒரு வங்கிப் பெட்டகத்தில் பத்திரப்படுத்த வேண்டும். இது மிக முக்கியம். வாய்வார்த்தையை நம்பும் நிலை கடந்து விட்டது என்பதை மனத்தில் இருத்திக் கொள்ளுங்கள்.

6. பரஸ்பர நம்பிக்கை சார்ந்த உறவுமுறை இனிமேல் சாத்தியமில்லை என்பதையும் தீர்மானமாக மனதில் இருத்திக் கொள்ளுங்கள். மிகவும் கவனத்துடன் மனைவியுடன் நடந்து கொள்ளுங்கள். பணம், சொத்து முதலியவை விஷயத்தில் திறந்த புத்தகமாக இராமல் சட்டரீதியான தற்காப்புடன் செயல்படுங்கள்

7. உங்கள் பெற்றோர் மற்றும் உறவினர் இந்த நடவடிக்கையினால் ஏதும் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்

உங்கள்மேல் இதுபோன்ற பொய் வழக்குகள் பாயும்போது அவற்றை புத்திகூர்மையுடன் எதிர் கொள்ளுவது மட்டுமின்றி சட்டரீதியாக எந்தெந்த வழிகளில் நீங்கள் எதிரியை வலிவுடன் திருப்பித் தாக்க இயலுமோ அவற்றையெல்லாம் கைக்கொல்ள வேண்டும். அப்போதுதான் எதிரியும் உங்கள் பலமறிந்து தொடர்ந்த தாக்குதலளிக்காமலிருப்பர். மனம் தளரவேண்டாம். இது உங்கள் வாழ்க்கை. அதனை ஒரு பெண் சின்னாபினமாக்க இடம் கொடுக்காதீர்கள். துணிவுடன் போராடுங்கள்!

திரு. நியோகிக்கு நீங்கள் ஏதேனும் அறிவுரை வழங்க விரும்பினால் அவரை psneog@gmail.com என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள்.

## தள ஆய்வுச் செய்தி

இந்தியாவில் உங்கள்முன் எதிர்ப்படும் எந்த ஒரு மனிதரிடமும் கேளுங்கள், குடும்ப வன்முறை யாரால் நிகழ்த்தப்படுகிறது என்று. தவறாமல் அவர்களுடைய விடை "ஆண்கள்" என்பதாகத்தான் இருக்கும். ஆனால் முறையாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி பார்த்தால் பெண்களால்தான் குடும்ப வன்முறை அதிகம் நடத்தப்படுகிறது என்பது புலப்படும். இந்தியாவில் பூனே பல்கலைக்கழகம் மூலம் அமேரிக்காவின் நியூ ஹாம்ப்ஷயர் பலகலையின் பேராசிரியர். மர்ரே ஸ்ட்ராச் என்பவர் நடத்தியுள்ள ஆய்வின்படி, இந்தியாவில் 31% பெண்கள் கணவர்மேல் வன்முறைத் தாக்குதல்கள் நிகழ்த்தியுள்ளனர், அதில் 13% மிக்கக் கடுமையாக!

## நாட்டுப்பற்றாளர்



டில்லி போலீஸ் ஆணையர் திரு. யுத்பீர் சிங் தட்வால் அவர்கள் 498A சட்டத்தை தவறாகப் பயன்படுத்துவோரை எச்சரித்துவிட்டு, இனிமேல் இந்தச் சட்டத்தின் அடிப்படையில் யாரையேனும் கைது செய்யவேண்டுமெனில் ஒரு துணை போலீஸ் கமிஷனரின் உத்தரவின்றி செய்யக்கூடாது என்று ஆணை பிறப்பித்திருக்கிறார். இந்த ஆணையினால் சட்டத்தின் துணையுடன் நடக்கும் பணம் பிடுங்கும் முறை ஒழிக்கப்படும். இந்த நேர்மையான நியாயமான ஆணை பிரப்பித்த போலிஸ் கமிஷணர் தட்வால் அவர்கள் இம்மாத *"உண்மையான நாட்டுப்பற்றாளர்"* என கௌரவிக்கப்படுகிறார்!

## அறிவுக் கொழுந்து



மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேன்மைத்துறை அமைச்சர் திருமதி. ரேணுகா சவுத்திரி அவர்கள் சமீபத்தில் இந்த 498A சட்டம் பற்றிய கூட்டம் ஒன்றில் தனக்கு மகன் பிறக்கவில்லை என்பதற்காக பெருமைப்படுகிறேன் என்று அறைகூவினார். இதே அமைச்சர் தன் மகளின் கண்வர் மற்றும் அவருடைய குடும்பத்தினர் மீது வரதட்சிணைக் கொடுமை வழக்கு ஒன்று தொடுத்திருக்கிறார். இந்த அமைச்சருக்கு மனித குலம் தழைக்க ஆண், பெண் இரு பாலரும் அவசியம் என்னும் அடிப்படையே விளங்கவில்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது. இத்தகைய ஆண் வெறுப்பு மிக்க அமைச்சருக்கு அவருடைய விநோதமான கருத்துக்களுக்காக இம்மாத *“அறிவுக் கொழுந்து”* என்னும் விருதை அளிக்கிறோம்.

## 498A சட்டப் பிரிவு மற்றும் அது தொடர்பான உதவிகளுக்கு அணுக வேண்டிய வலைத்தளங்களின் பட்டியல்:

1. http://mynation.net/db/: நீங்கள் 498A சட்டத்தினால் பதிக்கப்பட்டிருந்தாலோ, அல்லது அதிலிருந்து மீண்டிருந்தாலோ, அல்லது அந்த வன்கொடுமைச் சட்டம் உங்களைத் தீண்டும் சாத்தியங்கள் இருந்தாலோ உங்கள் விவரங்களை இந்தத் தரவுத் தளத்தில் பதிவு செய்யுங்கள்
2. http://saveindianfamily.org/: நம் பாரம்பரிய குடும்ப அமைப்பை பாதுகாக்க உதவி செய்யும் தளம் இது.
3. http://www.498A.org/: 498A பற்றிய ஒரு முழுமையான வலைவாசல் (portal)
4. http://protectindianfamily.org/: மனைவியால் இழைக்கப்படும் குடும்ப வன்முறைக்கெதிரான தன்னார்வ நிறுவனம்
5. http://498agirls.blogvis.com/: பொய் வழக்குப் போடும் பெண்களின் பட்டியல்
6. http://sahanaindia.org/: குடும்பங்களில் இணக்கமான உறவு நிலவ பாடுபடும் அமைப்பு
7. http://mynation.blogvis.com/: 498A பற்றிய விவரங்களை அளிக்கும் வலைப்பதிவு. சில நல்ல மற்றும் தவிர்க்கப்படவேண்டிய வழக்கறிஞர்கள் பற்றிய விவரங்களையும் இந்த வலைப்பதிவின் மூலம் பெறலாம்

## உங்கள் உதவி எங்களுக்குத் தேவை!

மேற்கண்ட பகுதிகளுக்கு நீங்கள் செய்திகளையும் விவரங்களையும் எங்களுக்கு அளித்து பங்கு பெற விருப்பமானால் முழு விவரங்களையும் அனுப்புங்கள். அடுத்து வரும் இதழ்களில் அவற்றைப் பதிப்பிக்க ஆவலாக இருக்கிறோம்.

இந்த குடும்பமுறை பாதுகாப்பு முயற்சியில் நீங்கள் ஈடுபாட்டுடன் கலந்து கொண்டு வாராந்திர அமர்வுகளிலும் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? உங்கள் செயல்பாட்டின் விவரங்களை அளியுங்கள். இங்கு பிரசுரிக்க ஏதுவாக இருக்கும்.

நீங்கள் IPC 498A சட்டத்தின் தவறான பயன்பாட்டினை எதிர்க்கும் மனப்பான்மை கொண்ட நல்ல மனம் கோண்ட வழக்கறிஞரா? தங்கள் விவரங்களை இந்த செய்தி மடலில் வெளியிட மிகவும் ஆவலாக இருக்கிறோம். தயை கூர்ந்து தங்களைப் பற்றிய விவரங்களுடன் இதுபோன்ற பொய் வழக்குகளை எங்ஙனம் எதிர்கொண்டீர்கள் என்னும் உதாரணங்களையும் அளித்தால் பலருக்கு பயனுள்ளதாக இருக்கும்.

இந்த செய்தி மடலுக்கு எழுத விருப்பமிருந்தால், திறமையான எழுத்தாளர்களை எங்களுடன் சேர்ந்து தொண்டாற்ற அழைக்கிறோம்!

நீங்கள் சட்டத்தை நிலைநிறுத்தும் அதிகாரியா? இதுபோல் சட்டத்தை தாங்கள் வஞ்சகமாக பணம் கறக்கும் கருவியாக சில பெண்கள் பயன்படுத்துவதை விரும்பாதவரா? தங்கள் மேலான கருத்துக்களை இந்த செய்தி மடல் மூலம் மக்களுடன் பகிர்ந்து கொள்ள உங்களை வரவேற்கிறோம்.

## எங்கள் அறைகூவல்:

குடும்ப வாழ்வு சார்ந்த அனைத்து சட்டங்களையும் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவாக அமையுங்கள். ஆண்கள் மட்டும்தான் தவறிழைப்பார்கள் என்னும் அடிப்படைக் கருத்தை மாற்றுங்கள்! தற்போதிருக்கும் சட்டங்கள் எந்தப் பிரச்னையையும் தீர்க்கவில்லை. புதிய பிரச்னைகளைத்தான் தோற்றுவிக்கின்றன. இதனால் இந்தியாவில் குடும்ப வாழ்வு என்பதே காணாமல் போய்விடும் அபாயம் உள்ளது!

நன்றியுடன், ஆசிரியர் குழு - *editorindianfamilytimes@gmail.com*